**S.C.No. 32/2025** **தேதி. 24.06.2026**

**அ.சா.3 – விஜயலட்சுமி**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –**

எனது வீட்டில் இறந்துபோன நபர் வாட்ச்மேனாக எத்தனை நாட்களாக வேலை செய்தார் என்றால் 1வருடமாக வாட்ச்மேன் வேலை பார்த்தார். அவர் வேலைக்கு வருவதற்கு முன்பிருந்தே அவர் மனைவி எனது வீட்டில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து ஜீவா நகர், முஸ்லீம் தெரு போன்ற இடங்களை தாண்டித்தான் இறந்துபோனவரின் வீடு அமைந்துள்ளது என்றால் அவர் வீடு எங்கு இருந்தது என்பது குறித்து எனக்குத் தெரியாது. போலிசார் விசாரணையில் இறந்தவரின் வீடு எங்குள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நான் அவர் வீட்டிற்கு முன்பின் சென்றதில்லை. சம்பவத்தின் போது எனக்கு 75 வயது என்றால் சரிதான். நான் வீட்டில் வேலை செய்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கும்போதோ அல்லது எழுதிவைக்கும்போது எனக்கு கண்ணாடி போடும் பழக்கம் உண்டு என்றால் எனக்கு இது வரை கண்ணாடி போடும் பழக்கம் கிடையாது. போலிசார் சொன்னதால் அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் உண்மையில் எனக்கு கண்ணாடி அணியும் பழக்கம் உண்டு என்றாலும் சரியல்ல. நான் வசிக்கும் வீட்டில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 1975ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். எனது வீட்டின் வாசல் காமராஜர் நகர் செல்லும் பிரதான சாலையை நோக்கி அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டினை சுற்றி டெக்ஸ்டைல் தொழிற்சாலைகளும், எண்ணெய் உற்பத்தி ஆலைகளும் அமைந்துள்ளன என்றால் சரியல்ல. குடியிருப்பு வீடுகள் தான் அமைந்துள்ளன. சம்பவம் நடந்த எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்றே விசாரித்தார்கள். அதன்பின்பு என்னை விசாரித்தார்களா என்றால்

தெரியாது. எனது வீட்டில் வாட்ச்மேனாக பணி செய்த இறந்துபோன நீராவி என்பவர் வாட்டசாட்டமாக 6 அடி உயரம் இருப்பார் என்றால் சரிதான். அவருக்கு தினமும் தூங்குவதற்கு மேசை கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. கட்டில் கொடுத்திருந்தேன். மேற்படி கட்டில் இரும்பு கட்டிலா என்றால் இல்லை. நார் கட்டில் ஆகும். சம்பவத்தின் போது இறந்துபோனவர் கட்டிலில் தான் படுத்திருந்தாரா என்றால் கட்டிலில் தான் படுத்திருந்தார். நான் சம்பவம் குறித்து இறந்தவரின் மனைவி பரமேஸ்வரிக்கு போன் போட்டு சொன்னேன். மேற்படி சம்பவத்தின் போது போன் செய்ய பயன்படுத்திய போனை போலிசார் விசாரணையின் போது கேட்டார்களா என்றால் இல்லை. எனது வீட்டின் பிரதான வாசலிலிருந்து போர்டிகோவிற்கு வரவேண்டும் என்றால் 60 மீ தூரத்தினை கடந்துதான் வரவேண்டும் என்றால் சரியல்ல. எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 அடி இருக்கும். எனது வீட்டின் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் வீட்டின் உட்புறமாக அமைந்துள்ளன என்றால் சரிதான். நான் வழக்கமாக சாப்பிட்டுவிட்டு இரவு 9.30 மணிக்கு எல்லாம் தூங்கிவிடுவேன் என்றால் சரியல்ல. எப்போது தூங்குவேன் என்று சொல்ல முடியாது. தூக்கம் வரும்போது தூங்குவேன். சம்பவத்தன்று நான் எப்போது தூங்கினேன் என்றால் குறிப்பாக சொல்ல முடியாது. அப்போதுதான் பேசிவிட்டு உள்ளே சென்றேன். சத்தம் கேட்டது. ஓடிவந்து பார்த்தேன். குத்திவிட்டான் குத்திவிட்டான் என்று கத்தினார். எனது வீட்டிற்கு பின்புறம் மீனாட்சி மருத்துவமனை உள்ளது என்றால் சரியல்ல. அது அடுத்த தெருவில் உள்ளது. மேற்படி மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்கக்கூடியது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. வீடு சம்பவத்தின் போது இருட்டாக இருந்தது என்றால் வெளியில் உள்ள விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சத்தம் கேட்டு நான் வெளியே வந்து மற்ற விளக்குகளை போட்டேன். நான் பார்க்கும்போது கட்டிலில் இரத்தமாக இருந்தது என்றால் கட்டிலிலும் இரத்தம் கிடந்தது. கீழேயும் இரத்தம் கிடந்தது. இறந்துபோனவர் கீழே விழுந்து கிடந்தார். நான் போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் இறந்துபோன நீராவி எனது வீட்டில் பணிபுரிந்தார் என்பதாலும் யாரோ ஒருவர் செய்த கொலையை எதிரி தான் செய்தார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

S.C.No. 32/2025 தேதி. 24.06.2026

**அ.சா.4 – சுப்பிரமணியன்**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –**

நான் நிரந்தரமாக கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக என்னை போலிசார் 4 நாட்கள் கழித்து விசாரித்தார்களா என்றால் சம்பவம் நடந்த அன்று இரவே விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இரவு என்றால் 31.05.2024ம் தேதி என்றால் சரிதான். அதன்பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் பரமேஸ்வரிக்கு போன் செய்து தகவல் சொன்னதாக உள்ளது என்றால் சரியல்ல. எனது சித்தியான அசா 3 தான் போன் செய்து தகவல் சொன்னார். இதற்கு முன்பு நீதிபதி முன்பு ஆஜர் ஆகி சாட்சியம் அளித்தேனா என்றால் இராஜபாளையம் நீதித்துறை நடுவர் நீதிபதி முன்பு ஆஜர் ஆகி சாட்சியம் அளித்தேன். மேற்படி இரகசிய வாக்குமூலத்தில் 100 க்கும் 108 க்கும் நான் தான் போன் செய்து தகவல் சொன்னேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் எதிரியை நான் அதிகமாக பார்த்ததில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசா 3 எனக்கு சித்தி என்றால் சரிதான். எனது அம்மாவின் உடன்பிறந்த சகோதரி ஆவார். எனது சித்தி வீட்டில் இறந்தபோன நபர் வாட்ச்மேனாக வேலை செய்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு எனது சித்தி இரவு நேரங்களில் படுத்து உறங்குவதற்கு மேசை கொடுத்திருந்தாரா அல்லது கட்டில் கொடுத்திருந்தாரா என்றால் கட்டில் தான் கொடுத்திருந்தார். சம்பவத்தன்று நான் கோயம்புத்தூரில் இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த வீட்டில் மாடியில் இருந்தேன். நான் சம்பவத்தினை பார்க்கவில்லை என்றாலும், சம்பவத்தின் போது நான் கோயம்புத்தூரில் தான் இருந்தேன் என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.